அசல் வழக்கு எண். 118/2014 தேதி 28.03.2024

பி.வா.சா.1 - ராஜமாணிக்கம்

<u>வாதி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி</u>

1. தாவா புல எண்.691 ல் மொத்தம் 6 உட்பிரிவுகள் உள்ளது. புல எண்.691 ன் வடபுறம் புல எண்.690, கீழ்புறம் புல எண். 692 ம், தென்கிழக்கில் புல எண். 693, தென்புறம் புல எண்.694 ம் உள்ளது. மேல்புறம் புல எண்.683 உள்ளது. 05.03.1959 ம் தேதி எனது தகப்பனார் இளவராக இருந்த பாகப்பிரிவினை பத்திரம் ஏற்பட்டது. மேற்படி பாகப்பிரிவினை பத்திரத்தில் 5 வது நபராக உள்ள 17 வயதுள்ள திருமலைச்சாமி எனது தகப்பனார். மேற்படி ஆவணத்தில் எனது தகப்பனார் திருமலைச்சாமி மாணிக்கம்பிள்ளையின் சுவீகார புதல்வன் என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் பத்திரம் 05.03.1959 ம் தேதி ஏற்பட்ட பாகப்பிரிவினை பத்திரத்தின் சான்றிட்ட நகல் என்றால் சரிதான். மேற்படி பாகப்பிரிவினையில் எனது தகப்பனாருக்கு புல எண்.691/6 ல் உள்ள சொத்துக்கள் பாகமாக கொடுக்கப்பட்டுள்ளது என்றால் அசல் பத்திரத்தை பார்த்தால் தான் தெரியும். மேற்படி பாகப்பிரிவினை பத்திரத்தில் புல எண்.691 ஐ சுற்றியுள்ள புல எண்களில் என் தந்தைக்கு பாகம் கொடுக்கப்பட்டுள்ளதா என்றால் பத்திரத்தை பார்த்தால் தான் தெரியும். புல எண்.691/6 ல் மொத்தம் ஏக்கர் 2.43 செண்ட் உள்ளது என்றால் சரிதான்.

2. மேற்படி நிலத்தில் என் தந்தை சோளம், கடலை , முருங்கை மற்றும் எள் ஆகியவை சாகுபடி செய்திருந்தார். புல எண்.691/6 ற்கு எந்த நிலங்களின் வழியாக என் தகப்பனார் விவசாயம் செய்வதற்கு சென்று வந்தார் என்று எனக்கு தெரியாது. பி.வா.சா-ஆ.8 புல வரைபடத்தில் கண்ட சர்வே எண் 691/6 க்கு மேற்கே சர்வே எண்.691/3 உள்ளது என்றால் சரிதான். 04.07.1973 ம் தேதி என் தகப்பனார் சர்வே எண்.691/3 சொத்தை மாணிக்கம்பிள்ளை மற்றும் அவரது மகன் மலைகொழுந்து ஆகியோரிடமிருந்து கிரையம் பெற்றார். அது ஏக்கர் 0.75 செண்ட் ஆகும். அதில் மாணிக்கம் பிள்ளை மற்றும் அவரது மகன் மலைகொழுந்து என்ன பயிர் விவசாயம் செய்தார்கள் என்று தெரியாது. மேற்படி நிலத்திற்கு அவர்கள் எந்த பாதை வழியாக வந்தார்கள் என்று எனக்கு தெரியாது. சர்வே எண்.691/3 க்கு வடபுறம் உள்ள சர்வே

எண்691/2 நிலத்தை என் தகப்பனார் சிவசாமி வகையறாவிடமிருந்து 28.09.1993 ம் தேதி கிரையம் பெற்றார். சிவசாமி மேற்படி நிலத்தில் விவசாயம் செய்யவில்லை. மேற்படி நிலத்திற்கு எந்த பாதை வழியாக சிவசாமி சென்று வந்தார் என்று எனக்கு தெரியாது.

3. சர்வே எண்.691/2, 691/3 மற்றும் 691/6 ஆகியவற்றை நானும் எனது தம்பி 4 ம் பிரதிவாதியும் பாகம் பிரித்து கொண்டோம். மேற்படி சொத்துக்கள் என் தம்பி பாகத்திற்கு கொடுக்கப்பட்டது. நாங்கள் கூட்டு குடும்பாக இருந்து வருகிறோம். மேற்படி என் தம்பி பாகச்சொத்துக்களில் கரும்பு, கடலை, எள் மற்றும் சோளம் சாகுபடி செய்து வருகிறார். 2005 ம் வருடம் நானும், என் தம்பியும் பாகம் பிரித்து கொண்டோம். அதுவரை நானும் சேர்ந்து தான் மேற்படி நிலத்தில் பாடுபட்டு வந்தோம் என்றால் தற்போதும் சேர்ந்து தான் பாடுபட்டு வருகிறோம். சர்வே எண். 690 ல் உள்ள வாரி கிணற்றிற்கு மேல்புறம் உள்ள பாதை வழியாக வந்து சர்வே எண்.691/1 மற்றும் 691/2 நிலத்திற்கு வருவேன் என்றால் சரியல்ல. சர்வே எண்.691/2 ஐ கிரையம் வாங்கும் வரை சர்வே எண்.691/6 நிலத்தில் விவசாயம் செய்யவில்லை. வழக்கிற்காக சர்வே எண்.691/6 ல் விவசாயம் செய்யவில்லை என பொய்யாக கூறுகிறேன் என்றும், வாரி கிணற்றிற்கு மேல்புறம் உள்ள பாதை வழியாக சர்வே எண்.691 ல் உள்ள அனைத்து உட்பிரிவுகளுக்கும் சென்று விவசாயம் செய்து வந்தோம் என்றால் சரியல்ல.

4. பொதுவாக பாதை வசதி இல்லாத நிலங்களுக்கு வேறு நிலங்களின் வரப்பின் வழியாகவோ அல்லது அதை ஒட்டி உள்ள வேறு பாதை வழியாகவோ சென்று விவசாயம் செய்வார்கள் என்றால் சரியல்ல. 04.07.1973 ம் தேதி சர்வே எண்.691/3 ல் ஏக்கர் 0.75 செண்ட் நிலத்தை என் தந்தை கிரையம் பெற்ற ஆவணத்தில் மாமூல் பாதை பாத்தியம் என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். பொதுவாக அவ்வாறு குறிப்பிடுவது வழக்கம். மேற்படி வாசகத்தின் அர்த்தம் ஏற்கனவே உள்ள சர்வே எண்.690 ல் உள்ள பாதை வழியாக தென்புறமாக வந்து சர்வே எண்.691/1 மற்றும் 691/2 ல் வடபுற ஓரமாக கிழக்கு நோக்கி வந்து தென்புறம் வருவதற்கான பாதை குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. 28.09.1993 ம் தேதி எனது தந்தை கிரையம் பெற்ற கிரைய பத்திரத்தில் மாமூல் வழி நடை பாதை பாத்தியம் என்பது மேற்கண்டவாறு பாதைகளை பொறுத்து எழுதப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. 1959 ம் வருட பாகப்பத்திரத்தில் எனது தகப்பனார் பாகத்திற்கு 12 வகையான சொத்துக்கள்

காட்டப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

5. அதில் 11 வது அயிட்டமாக மாமூல் வழி நடை பாதை பாத்தியம் என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் அது சர்வே எண்.657/3 மற்றும் 657/4 ஆகியவற்றை பொறுத்தாகும். அவ்வாறு சர்வே எண் குறிப்பிட்டு 11வது அயிட்டம் எழுதப்படவில்லை. 11வது இலக்க சொத்திற்கு ரூ.6/- மதிப்பு காட்டப்பட்டுள்ளது. பாதைக்கான நிலம் பூமியில் ஒதுக்கப்பட்டுள்ளதால் அதற்கான மதிப்பு குறிப்பிட்டு பத்திரம் எழுதப்பட்டுள்ளது என்றால் சரிதான். எனது தம்பி பாகச் சொத்துக்ககளை எனது பெரியப்பா சங்கப்பிள்ளை என்பவருக்கு அடமானம் வைத்துள்ளார். மேற்படி அடமான ஆவணத்தில் சர்வே எண்.691/2, 691/3 மற்றும் 691/6 ஆகிய சொத்துக்கள் காட்டப்பட்டுள்ளது. மேற்படி அடமான வைத்துள்ள சொத்துக்களை எனது தம்பி இளங்கோ அவரது மனைவிக்கு 14.02.2007ம் தேதி தான செட்டில்மெண்ட் கொடுத்துள்ளார் என்றால் சரிதான். மேற்படி இரண்டு பத்திரங்களிலும் எனது தம்பி மாமூல் வழி நடை பாத்தியம் குறிப்பிட்டுள்ளார்.

6. மேற்படி வாசகம் வாரி கிணற்றின் மேல்புறம் வழியாக தென்புறம் நோக்கி வந்து சர்வே எண்.691/1ன் வடபுறம் வரும் பாதையை குறிக்கும் என்றால் சரியல்ல. எனது பெரியப்பா வைரப்பெருமாளின் மகள் கலாமணி 1ம் வாதியின் மனைவி. வாதிகளும் நாங்களும் நெருங்கிய உறவினர்கள் இல்லை. எங்களுக்குள் குடும்ப பகை எதுவும் இல்லை. அசல் வழக்கு எண்.98/2015 வழக்கை கலாமணி எங்கள் மீது தாக்கல் செய்திருந்தார். மேற்படி வழக்கு சர்வே எண்.691/3ல் பட்டா தவறுதலாக வழங்கப்பட்டது என்றும், மேற்படி சொத்து கலாமணிக்கு பாத்தியப்பட்டது என பரிகாரம் கோரியிருந்தார். 1ம் வாதிக்கும் கலாமணிக்கும் திருமணம் நடந்தது முதல் எங்களுக்குள் பேச்சு வார்த்தை இல்லை. எந்த வருடம் அவர்களுக்கு திருமணம் நடந்தது என்று தெரியாது. நான் வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றும், வாரி கிணற்றிற்கு மேல்புறம் உள்ள பாதை வழியாக வந்து சர்வே எண்.691/1 மற்றும் 691/2 ஆகிய சொத்துக்களில் என் தந்தை விவசாயம் செய்து வந்தார் என்றும், அதன் காரணமாக தான் என் தகப்பனார் மற்றும் சர்வே எண்.691/1 மற்றும் 691/3 நிலங்களின் உரிமையாளருக்கு இடையே புரிந்துணர்வு ஏற்பட்டு நிலத்துக்கடியில் பாசன குழாய் மற்றும் சிமெண்டாலான காற்றுக் குழாய் ஆகியவை அமைக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

7. மேற்படி பாதை வழக்கத்தில் இருந்து வருகிறது என்றும், அதன் அடிப்படையில் வாதிகள் சொத்தை கிரையம் பெற்றனர் என்றும், எங்கள் குடும்ப பகை காரணமாக மேற்படி பாதையை பயன்படுத்த விடாமல் தீவன புல் நட்டுள்ளதால் தாவா வழக்கு வாதிகளால் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. மின் இணைப்பு வேண்டி 1ம் வாதி கொடுத்த விண்ணப்பத்தின் பேரில் மின் வாரிய அதிகாரிகள் வாதிகள் இடத்தை நேரில் பார்வையிட்டார்களா என்று எனக்கு தெரியாது. வாதிகளுக்கு தாவாப்படி பரிகாரம் கிடைக்கக்கூடியது என்றால் சரியல்ல.

Taken down by me in open court read over interpreted in the witness and acknowledged by him /her to be correct.

Sd/-P.பாலமுருகன்

**Additional District Munsif,**
**Kulithalai.**